# விழுப்புரம் நகராட்சி

**2021–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26–ஆம் தேதி வெள்ளிக்கிழமை மதியம் 12.30 மணிக்கு விழுப்புரம் நகராட்சி அலுவலகத்தில்** நடைபெற்ற **"அவசர கூட்ட"** நடவடிக்கைகள்.

**முன்னிலை :–** **ந.தட்சணாமூர்த்தி, பி.காம்.,**
**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்**

## மன்றப் பொருள்

**1.** இந்நகராட்சிக்கு சொந்தமான மூன்றாண்டு குத்தகை உரிம இனங்கள் (2021–2022 முதல் 2023–2024 முடிய) நகரமன்ற தீர்மான எண்.2430, நாள்.29.01–2021–ல் ஒப்புதல் வழங்கியதன் பேரில் 18.02.2021 அன்று நடைபெற்ற பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளியில் ஏலம் போகாத கீழ்க்கண்ட இனங்களுக்கு மீண்டும் குறுகியகால மறு பொது ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி 26–02–2021 அன்று கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற மறு பொது ஏலம் / மறு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகளை மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

1. புதிய பேருந்து நிலைய தென்மேற்கில் உள்ள கழிப்பிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.

   மறு பொது ஏலம் /மறு ஒப்பந்தப்புள்ளிக்கு எவரும் விண்ணப்பிக்கவில்லை.

2. புதிய பேருந்து நிலையத்தில் வாகனங்கள் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்

| வ. எண் | பெயர் (ம) முகவரி | ஏலம் கோரிய தொகை ரூ. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | செ.மணிகண்டன், த/பெ செல்லையன், எண்.24, ஜி.ஆர்.பி தெரு, விழுப்புரம். | 14,65,000 |
| 2. | முத்தம்மாள், க/பெ அண்ணாமலை, எண்.14/3சி, விஸ்வலிங்கம் லே–அவுட், விழுப்புரம். | 14,59,000 |
| 3. | கோவிந்தராஜ், த/பெ சிங்கார உடையார், 26/44, திரௌபதி அம்மன் கோயில் தெரு, விழுப்புரம். | 14,58,000 |
| 4. | பாரத் த/பெ பழனி, 27/25, முருகன் கோயில் தெரு, வழுதரெட்டி, விழுப்புரம். | 14,63,000 |
| 5. | செந்தில் குமார், த/பெ சுப்பிரமணியன், 28, பெரியார் நகர், கீழ்பெரும்பாக்கம், விழுப்புரம். | 14,61,000 |

3. கிழக்கு பாண்டி ரோடு நீர்தேக்க தொட்டி வளாகத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள மீன் நாளங்காடியில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்
   மறு பொது ஏலம் /மறு ஒப்பந்தப்புள்ளிக்கு எவரும் விண்ணப்பிக்கவில்லை.

4. எம்.ஜி.ரோடு மீன் நாளங்காடியில் உள்ள கழிவறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்

மறு பொது ஏலம் /மறு ஒப்பந்தப்புள்ளிக்கு எவரும் விண்ணப்பிக்கவில்லை.

5. புதிய பேருந்து நிலையத்திற்குள் தினசரி வந்து செல்லும் பேருந்துகள் மற்றும் இரவு தங்கும் பேருந்துகளுக்கு நுழைவு கட்டணம் வசூலித்துக் கொள்ளும் உரிமம்.

மறு பொது ஏலம் /மறு ஒப்பந்தப்புள்ளிக்கு எவரும் விண்ணப்பிக்கவில்லை.

**அலுவலக குறிப்பு:—**

| | |
|---|---|
| இனம் எண்.1—க்கு | மறு பொது ஏலம் /மறு ஒப்பந்தப்புள்ளிக்கு எவரும் விண்ணப்பிக்கவில்லை. |
| இனம் எண்.2—க்கு | புதிய பேருந்து நிலையத்தில் வாகனங்கள் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்க்கு திரு.செ.மணிகண்டன் த/பெ செல்லையன், என்பவர் உயர்ந்த பட்ச ஏலக் கேள்வி ரூ14,65,000/—க்கு ஏலம் கோரியுள்ளதால் குத்தகை உரிமத்தை வழங்க மன்றம் அனுமதிக்கலாம். |
| இனம் எண்.3—க்கு | மறு பொது ஏலம் /மறு ஒப்பந்தப்புள்ளிக்கு எவரும் விண்ணப்பிக்கவில்லை. |
| இனம் எண்.4—க்கு | மறு பொது ஏலம் /மறு ஒப்பந்தப்புள்ளிக்கு எவரும் விண்ணப்பிக்கவில்லை. |
| இனம் எண்.5—க்கு | மறு பொது ஏலம் /மறு ஒப்பந்தப்புள்ளிக்கு எவரும் விண்ணப்பிக்கவில்லை. |

(10221/2019/அ1)

**2.** இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11, திரு.வி.க. வீதியில் அமைந்துள்ள அருள்மிகு ஆஞ்சநேய சுவாமி திருக்கோயில் லட்சதீப மகோற்சவப் பெருவிழாவினை முன்னிட்டு திரு.வி.க. சாலை கோர்ட் ரோடு சந்திப்பிலிருந்து ஜவஹர்லால் நேருஜி ரோடு சந்திப்பு வரை போக்குவரத்திற்கும், பொது மக்களுக்கும் இடையூறு இன்றி ஒப்படைக்கும் நாள் முதல் 30 தினங்களுக்கு சாலை ஓரம் தற்காலிக தீப்பற்றாத தகர கொட்டகை கொண்ட கடைகள் அமைத்து கட்டணம் வசூலிக்கும் உரிமத்திற்க்கு நகர்மன்ற தீர்மான எண்.2464, நாள்.29.01.2021 ஒப்புதல் பெறப்பட்டதை தொடர்ந்து 26.02.2021 அன்று பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பொது ஏலத்தில் எவரும் கலந்துகொள்ள முன்வராத நிலையில் கீழ்கண்ட விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண். | பொது ஏலதாரர் விபரம் | கோரிய ஏலக் கேள்வி ரூ. |
|---|---|---|
| 1 | திரு. கே. கோவிந்தராஜ்,<br>எண்.8டி, கைவள்ளியர் தெரு, விழுப்புரம். | 2,00,000/— |
| 2 | திரு. டி. மோகன்,<br>எண்.8, வடக்கு தெரு, விழுப்புரம். | 2,30,500/— |

**அலுவலக குறிப்பு :—**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.டி.மோகன் என்பவர் உயந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி தொகையாக ரூ.2,30,500/— கோரியுள்ளார். மேற்படி தொகை கடந்த ஆண்டை விட ரூ.6,500/—ன் கூடுதலாக உள்ளதால், திரு.டி.மோகன் என்பவர் உயர்ந்த பட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.2,30,500/—ஐ உறுதி செய்து மேற்படி உரிமத்தினை அன்னாருக்கு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(1292/2021/அ1)

**ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்,**
**விழுப்புரம் நகராட்சி.**